# பொதுக்காலம் 25 ஆம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு A

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம் 55: 6-9,

திபா 145: 2-3. 8-9. 17-18,

திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய

திருமுகத்திலிருந்து வாசகம் 1: 20c-24, 27a,

மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 20:1-16

## திருப்பலி முன்னுரை:

ஆண்டவரே நாள்தோறும் உம்மைப் போற்றுவேன்: உமது பெயரை என்றும் எப்பொழுதும் புகழ்வேன்!

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று பொதுக்காலம் இருபத்தைந்தாம் ஞாயிறு. தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும், அண்மையில் இருக்கும் ஆண்டவரின் சந்நிதானத்தில் அருளாசீர் பெற்றிட ஒன்று கூடியுள்ளோம்.

இறைவனுடைய வழிகள் இரக்கமும், அருளும் நிறைந்தவை: அவருடைய எண்ணங்கள் ஆற்றலும், சக்தியும் பொருந்தியவை: அநீதி என்பதும், பாரபட்சம் என்பதும் ஆண்டவரிடம் இல்லை: மன்னிப்பது அவருடைய இயல்பு: எனவே நம்முடைய எண்ணங்களையும், சிந்தனைகளையும் இறைவனுடைய எண்ணங்களாகவும், சிந்தனைகளாகவும் ஒப்பிட்டுச் செயற்படமுடியாது என்பதும், நாம் இறைவனை விசுவாசத்தோடு அணுகி வரும்போதும், மனமாற்றம் அடையும் போதும் நாம் நிறைவாழ்வைப் பெற்றுக்கொள்ளுகின்றோம் என்னும் உயர்வான உண்மைகள் இன்றைய இறைவார்த்தைகள் வழியாக நமக்குத் தரப்படுகின்றன.

ஆத்தோடு திருத்தூதர் பவுலடியார்: நம்முடைய வாழ்வாலும் பணியாலும் இயேசுவை மகிமைப்படுத்த அழைக்கின்றார். கிறிஸ்துவுக்காக வாழ்ந்தாலும், இறந்தாலும் அது ஆதாயம் தருவதே என்பதையும் ஆழமாக வலியுறுத்துகின்றார். எனவே நாமும், நம் வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் இறைவனைக் கண்டடையவும், அவரை அணுகிச் செல்லவும் கொடுக்கப்பட்ட மாபெரும் வாய்ப்பாகக் கருதி இறைவனை நோக்கிச் செபித்து, அவரை நமது வாழ்வால் மகிமைப்படுத்த நம்மை இத் திருப்பலியில் அர்ப்பணித்துச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. அன்புத் தந்தையே எம் இறைவா!**

உம் திருஅவை உள்ள அனைத்துதரப்பினரும் இயேசு தன் இறுதி மூச்சு வரை மன்னிப்பைத் தன் சுவாசமாக்கியது போல, தங்கள் வாழ்வில் எண்களைத் தாண்டி, கணக்கையெல்லாம் தாண்டி எப்போதும் மன்னிக்கவும். ஒருவர் ஒருவரை நட்புப் பாராட்டவும், உள்ளதை உள்ளதுபோல் ஏற்றுக்கொண்டு "மன்னிப்பதாலேயே, நாம் மன்னிப்பு பெறுகிறோம்." என்பதை உணர்ந்த செயல்படத் தேவையான ஞானத்தை நிறைவாகப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**2. நீதியின் தலைவரே இறைவா,**

உமது பரிவின் பார்வைக்காக உம்மைப் போற்றுகிறேன். எந்த ஒரு மனிதரையும், நிகழ்வையும், மனிதப் பார்வையில் பாராமல், உமது நீதியின் பார்வையில், பரிவின் பார்வையில் பார்க்கவும், பிறரது ஆசீர்வாதங்களைக் கண்டு பொறாமைப்படாமல், உமது வள்ளன்மையைப் போற்றவும் எங்களுக்கு அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. இரக்கமும் கனிவும் உடையவரான தந்தையே இறைவா!**

நாங்கள் ஒவ்வொருவரும்: எம் வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் உம்மைக் கண்டடையவும், உம்மை அணுகி வரவும், கொடுக்கப்பட்ட மாபெரும் வாய்ப்பாகக் கருதி, எம் தீய வழிகளை விட்டு மனமாற்றம் பெற்று உமக்கு உகந்தவர் களாக வாழ்ந்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. சமூக மாற்றத்தின் நாயகனே எம் இறைவா!**

நீதியினிமித்தம் துன்புறுத்துப்படுவோர் பேறுபெற்றோர் என்னும் கூற்றுக்கு இணங்க இன்று சமூகத்தில் நிலவும் அவலங்கள், கொலை, கொள்ளை, திருட்டு, வன்முறை, தீவிரவாத செயல்கள் இவற்றிலிருந்து மக்கள் அனைவரைப் பாதுகாத்துப் பெண்கள் சமூகத்தில் மாண்புடன் நடத்தப்பட வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.

**5.அருள்கொடையின் நாயகனே எம் இறைவா!**

இக்காலத்தில் இளையோர், இளம் பெண்கள், சிறுவர், சிறுமியர் அறிவியலின் வளர்ச்சித் தான் மிகச் சிறந்தது என்று நினைக்காமல் இறைஞானமே எல்லாவற்றிலும் தலைசிறந்தது என்ற புரிந்துகொள்ளவும், காலங்களையும், யுகங்களையும் கடந்த கடவுள் நம்மோடு நம்மில் செயலாற்றுகிறார் என்பதைப் புரிந்து, இறைவார்த்தையின் ஆழத்தை அதிகமாக அறிந்துச் சொல்லாலும் செயலாலும் சான்றுபகரும் வாழ்வு வாழத் தேவையான அருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை அன்புடன் வேண்டுகிறோம்.

**6. சமூக மாற்றத்தின் நாயகனே எம் இறைவா!**

உலகெங்கும் கோபத்தாலும் வெறுப்புணர்வாலும் பிளவுப்பட்டுச் சிதறியடிக்கப்பட்ட உம் மக்களைக் கண்ணோக்கியருளும். பகைமையை மறந்து எப்போதெல்லாம் பிறருக்கு மன்னிப்பை வழங்குகிறோமோ, அப்போதெல்லாம் மன்னிப்பைப் பெறுகிறோம்..என்பதை அனைவரும் உணர்ந்து மன்னிப்புடன் வரும் ஆழ்ந்த அமைதியை, நிறைவைப் பெறு வாழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**7. ஆதரித்தாளும் எம் இறைவா,**

எம் இளையோர் அனைவரையும் பாகுபாடுயின்றித் திரு அவையில் பல்வேறு மேய்ப்புப் பணியில் ஈடுபடுத்தி, அதனால் அவர்களின் ஆன்மீக வாழ்வில் வளம் பெற்றுத் தங்கள் சொல்லாலும் செயலாலும் சான்றுப் பகரும் வாழ்வை வாழ்ந்திடத் தேவையான வரங்களைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.